# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1912/34 - 2015 අප්‍රේල් මස 30 වැනි බ්‍රහස්පතින්දා - 2015.04.30

*1912/34 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**பதுளை முதியங்கனை ரஜ மகா விகாரையின் வருடாந்த பெரஹரா உற்சவம்**

*362 ஆம் அத்தியாயமான தலயாத்திரை கட்டளை சட்டத்தில் வெளியிடப்பட்டுள்ள 1948, செத்தெம்பர் மாதம் 10 ஆந் திகதிய 9902 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலிலும், 1951, ஓகத்து 17 ஆந் திகதி 10283 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலிலும் 1955, மாச்சு 25 ஆந் திகதிய 14778 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலிலும், 1992 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, அதிகார ஒப்படைப்பு (பிரதேச செயலாளர்களுக்கு) சட்டத்தின் படியும் , 2011.06.10 ஆந் திகதிய 1710 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலிலும் வெளியிடப்பட்ட பதுளை முதியங்கனை ரஜ மகா விகாரையின் (வருடாந்த பெரஹரா உற்சவம்) தொடர்பான யாப்பின் படியும் பதுளை பிரதேச செயலாளர் பீ. எஸ். பீ. அபேவர்தன ஆகிய எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி 2015 ஆம் ஆண்டின் பதுளை, முதியங்கனை ரஜ மகா விகாரையின் வருடாந்த பெரஹரா உற்சவம் தொடர்பாக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆணைகளை பிறப்பிக்கிறேன்.*

*1. 2015, மே 30 ஆந் திகதி பதுளை முதியங்கனை ரஜ மகா விகாரையின் வருடாந்த பெரஹரா உற்சவம் ஆரம்பிக்கப்பட்டு, 2015, மே 03 மற்றும் 04 ஆகிய இரு தினங்களில் வீதி ஊர்வலம் முடிவடைந்து முதியங்கனை ரஜ மகா விஹாரையினை வந்தடைந்தவுடன் நிறைவுறும் என்பதை அறியத்தருகிறேன்.*

*2. பெரஹராவின் பயண மார்க்கம் :*

*2015, மே மாதம் 02 ஆந் திகதி விஹாரையின் உள்ளே பெரஹரா உற்சவம்*

*2015, மே மாதம் 03 ஆந் திகதி முதியங்கனை விஹாரையில் இருந்து அநகாரிக தர்மபால மாவத்தை, கீழ் ரஜ வீதி, கொகோ வத்த வீதி, உதயராஜ மாவத்தை, பசார் வீதி அருகாமையினால் முதியங்கனை வீதியினூடாக (கீழ் வீதி) முதியங்கனை விகாரையினை வந்தடைதல்.*

*3. பெரஹரா காலத்திற்குள் பிரதான பாதையில் தனியார் வாகனங்களை நிறுத்தி வைப்பதை தடை செய்கிறேன். துவிச்சக்கரவண்டி, மாட்டு வண்டி உட்பட அனைத்து வாகனங்களும் எனது அல்லது விகாரையின் பொறுப்பான நிலமே அவர்களிடம் அனுமதிப்பத்திரம் இல்லாமல் விகாரை காணிக்குள் வருவதை தடை செய்கிறேன்.*

*4. பெரஹரா ஊர்வலம் செல்லும் பாதைகளில் பதுளை மாநகர சபையினால் முறையாக அனுமதியுடன் நிர்மாணிக்கப்படுகின்ற கட்டிடங்கள் மற்றும் தற்போது உள்ளே நிரந்தர கட்டிடங்கள் சுகாதார திணைக்களத்தின் ஆலோசனைகளுக்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும். காணிப்பகுதிகளை குத்தகைக்கு வாங்கும் வியாபாரிகளினால் விகாரையின் பெரஹராவின் பின் தமது தற்காலிக கட்டிடங்களை அகற்றியதன் பின் பெரஹரா பயணிக்கும் பாதை மற்றும் விகாரை காணிக்குள் உள்ள பொலித்தீன் உட்பட அனைத்து குப்பைகளையும் ஒன்று சேர்த்து பொது சுகாதார பரிசோதகரின் ஆலோசனையின்படி அகற்ற வேண்டும்.*

5. என்னிடம் பெற்றுக்கொண்ட அனுமதிப்பத்திரம் இல்லாமல் வணக்கத்திற்குரிய காணி மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் எந்தவொரு தற்காலிக கட்டிடங்களையும் அமைப்பதை தடை செய்கிறேன்.

6. எவரேனும் ஒருவரினால் என்னிடம் அல்லது பதுளை மாநகர சபையின் அனுமதி இல்லாமல் பாதையாக பயன்படுத்தலோ அல்லது ஒதுக்குவதோ அல்லது ஏதேனும் காணி அல்லது வணக்கத்திற்குரிய பிரதேசத்திற்குள் ஏதேனும் காணியை பயன்படுத்தி குடிசையோ அல்லது ஏதேனும் கட்டிட நிர்மாணிபபையோ அல்லது பெரிதாக்குதலோ மேற்கொள்ளக்கூடாது.

7. பட்டாசு போன்றவற்றை பிரதேசத்திற்குள் பற்றவைத்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

8. பிரதேச செயலாளரின் அல்லது அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவரின் அனுமதி இல்லாமல் எவரேனும் ஒருவரினால் பாசரை பிரதேசங்களில் சீட்டுக்கள், கொடிகள் விற்பனை மற்றும் வேறுவகையான எந்தவொரு விடயத்திற்காகவும் பங்களிப்பு நிதி வசூலிக்கவும் கூடாது.

பீ. எஸ். பீ. அபேவர்தன,
பிரதேச செயலாளர்,
பதுளை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
பதுளை,
*2015*, ஏப்பிறல் *28*.

*5- 389*